**செபிக்கும் போது தீப்பந்தமாக இருந்து, பாதைக்கு வெளிச்சத்தையும் குளிருக்கு உஷ்ணத்தையும் கொடுங்கள்.**

- புனித ஜோசேமரியா ஸ்சிரிக்கா

இயேசுவிடம் அந்த பணக்கார இளைஞன் ஓடியது போல, நாமும் கடவுளிடம் ஓடுகிறோம். தன்னிடம் இருப்பதை எல்லாம் விற்று, ஏழைகளுக்குக் கொடுத்து, தம்மைப் பின்தொடருமாறு இயேசு அவனிடம் கூறுகிறார். சொத்துகள் மீது அதிக பற்று இருந்ததால், பணக்கார இளைஞனுக்கு இதனைச் செய்ய கடினமாக இருந்தது.

நாம் எவ்வாறு இருக்கிறோம்? நமது சொத்து (பணம்), திறமை, சேவை, நேரம் முதலிவற்றை ஏழைகளுக்கு வழங்க நாம் தயாராகயிருக்கிறோமா? செலவு வரும் என எண்ணி பின்வாங்கி, வட்டத்திற்குள்ளேயே வாழ விரும்புகிறேமா? அல்லது திருச்சபை கட்டளையை மட்டும் பின்பற்றினால் போதும், இயேசுவைப் பின்பற்றத் தேவையில்லை என நினைக்கிறோமா?

மீட்பு நமக்கு வேண்டுமென நாமெல்லாம் தீர்க்கமாக முடிவு செய்யாவிட்டால், அந்த மீட்பு நமக்கு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும் என நாம் அறிவுறுத்தப்படுகிறோம். மீட்பு பெற்றால், அதனைப் பொக்கிஷமாக பாதுகாக்க வேண்டும். பதவி, பட்டம், சொத்து அனைத்திற்கு மேலாக **கடவுளே நமது வாழ்வில் முதன்மை** என எண்ண வேண்டும்.

பின்னர் நமது செபம் எதுவாக இருக்கும்? சொத்துகளுக்கு மேலாக ஞானத்தை கடவுளிடம் வேண்டினார் மன்னர் சாலமோன் என (சா.ஞா.7:7-11) படிக்கிறோம். அரியணை, அதிகாரம், பொன், வெள்ளி அனைத்திற்கும் மேலாக ஞானமே பெரிது என கருதினார், மன்னர் சாலமோன்.

ஆண்டவரை அதிகமான அன்பு செய்த மன்னர் சாலமோன், அரசாட்சி புரிய நல்லதையும் கெட்டதையும் கண்டறியும் பகுத்தறிவை கடவுளிடம் கேட்டார்.

நீண்ட ஆயுளையும் பணத்தையும், எதிரிகளின் தலையையும் கேட்காமல், ஞானத்தைக் கேட்க மன்னர் சாலமோனிடம் ஆண்டவர் பெருமிதம் கொண்டார். இதனால் அவருக்கு ஞானத்தையும் பகுத்தறிவையும் கொடுத்ததோடு, பொன்னையும் பொருளையும் அதிகமாக கொடுத்தார், ஆண்டவர்.

ஆகவே செபத்தில் தாழ்ச்சியோடும் உண்மையோடும் வேண்டுங்கள், ஆண்டவர் கொடுப்பது கண்டு ஆச்சிரியம் அடைவீர்கள். ✝

**வாரம் ஒரு வசனம்**

**கடவுளே நமது வாழ்வில் முதன்மை.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 41/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

14 அக்டோபர் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 28ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

**தடைகளைக் கடந்து கிறிஸ்துவோடு பயணிக்கிறேன்**



# ஞானம் பெறுவது ...நமது செபம்

இன்றைய நற்செய்தியில் (மாற்கு 10:17-30) வரும் பணக்கார இளைஞனைப் போல் நாம் இருக்கிறோம். வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடி நாம் அலைக்கிறோம். சில வேளைகளில் நமது மனம் வெறுமை அடைகிறது, உலகப் பொருள்களால் அல்லாமல் கடவுளால் மட்டுமே அதனை திருப்பி அல்லது நிறைவு செய்ய முடியும். இதனால் கடவுளிடமே நாம் வினவுகிறோம்.

## மினவுதல் மாதா தேவாலயம்

85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*

***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***

*2018 அக்டோபர் (ஐப்பசி) மாதத்தின் கருப்பொருள்:*

***நான் எல்லைகளைத் தாண்டி கிறிஸ்துவில் பயணிக்கிறேன்***

**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**

**(1848 - 2018)**

### பங்கு அலுவலக நேரம்

திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 28ஆம் ஞயிறு** **சனி 13-10-2018 - ஞாயிறு 21-10-2018**

சா.ஞா: 7: 7 - 11 தி.பா: 89: 12- 13, 14-15, 16- 17 எபிரேயர்: 4: 12 - 13 மாற்கு: 10: 17 - 30 (10: 17-27)

**"ஆண்டவரே உம் பேரன்பால் எங்களுக்கு நிறைவளியும்" - திபா 89**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 13 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(இளைஞர்கள்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 14 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (பீட பணியாளர்கள்)<br>திருப்பலி (ஆ) (ம.க. படிவம்3)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பல (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் )<br>**மருத்துவ முகாம் : காலை 8 – 2 மணிவரை ஆலய மண்டபம்** |
| திங்கள் | 15 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 16 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 17 | காலை திருப்பலி நடைபெறாது | | **குருக்களின் மாதாந்திர தியானம்,** APC கோலாலும்பூர் |
| வியா | 18 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 19 | 6.45 கா | திருப்பலி | |

**பொதுக்காலம் 29ஆம் ஞயிறு**

எசாயா: 53: 10 - 11 தி.பா: 32: 4- 5, 18-19, 20 எபிரேயர்: 4: 14 - 16 மாற்கு: 10: 35 - 45

**"உம்மையே நாங்கள் நம்புவதால், உமது பேரன்பு எம்மீது இருப்பதாக" - திபா 32**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 20 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(இளைஞர்கள்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை<br>**மாலை 7.00 மணிக்கு குழந்தைகளுக்கான திருமுழுக்கு** |
| ஞாயிறு | 21 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (தூய ஆவி அருங்கொடை)<br>திருப்பலி (ஆ) (புனித பவுலினா)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பல (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30 (ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

### 2018 அக்டோபர் (ஐப்பசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்

**i) ஆலய காணிக்கை**

அ) 06/07 அக்டோபர் ரிம:9,918.00
ஆ) சமூக அக்கறைப் பணிக்குழு ரிம:6,081.05

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**ii) உலக தூதுப்பணி ஞாயிறு - 21-10-2018** நம்முடைய இந்த வாரக் காணிக்கைகள் இக்கருத்துக்களுக்காக ஒதுக்கப்படும்

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**iii) ஆலயத்தின் உடைமைகளை அக்கறையோடுப் பராமரியுங்கள்** (ஒலி/ஒளி திரை, மேசை, நாற்காலிகள் முதலியன) பயன்பாட்டுக்குப் பின் உரிய இடத்தில் அதை வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். பொறுப்புணர்வோடு நடந்துகொள்வோம்.

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்**

சேகரமேரி த/பெ மரிய ராஜு இறப்பு 11-10-2018

**முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!**

1. **புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நற்கருணைப் பணியாளர்களுக்கு வாழ்த்துகள்.** இவர்கள் பங்கு/அதிச வில் நற்கருணைப் பணியாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். உங்களின் பணியை சிறப்பாக செய்திட இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!
2. **அக்டோபர் மாதம் - செபமாலை மாதம்** - அனைத்து அதிச க்களும் செபமாலை பக்திமுயற்சியை வழிநடத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். அதிச வில் உள்ள அனைவரையும் வரவழையுங்கள். நம் அன்னை மரியாள் அனைவருக்கும் ஊக்கமளிப்பாராக!
3. **குருக்களின் விடுமுறை** அருள்பணியாளர் சேவியர் எண்ட்ரூ விடுமுறையில் இருக்கிறார் (14-29 அக்டோபர்) அருள்பணியாளர் ஜோர்ஜ் ஹாரிசன் விமுறை 17-20 அக்டோபர்
4. **வளக்கவுரை: திருமுழுக்கு மற்றும் உறுதிப்பூசுதல் அருளடையாளங்கள்** நாள்: 08-11-2018 (வியாழன்) API, K.L. நேரம்: மாலை 7.00 எ 10.00 வரை (தொடர்பு: 03-20 26 64 66) அல்லது இணையத்தின்வழி பதிவு https://api.ArcKL.org

இன்று திருப்பலியை வழிநடத்திய பீடச்சிறுவர்களுக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

➢ **<u>ஏழைகளுக்கான பணிக்குழு</u>** (ஏழைகளின் திருச்சபை ஏழைகளுக்கானது - திருத்தந்தை பிரான்சிஸ்)
- 22/23 செப்டம்பர் பணிக்குழுவை நியமித்து அதனுடைய குழு உறுப்பினர்களை ஆசீர்வதித்தல்
- மருத்துவ முகாம் 14-10-2018
- ஆன்மீக உரை - "ஏழைகளின் திருச்சபை" வழங்குபவர்: அருள்பணியாளர் சேவியர் - 03-11-2018 (பங்கு மக்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம்)
- உலக ஏழைகளின் நாள்: 17 ,18 நவம்பர் 2018
- கூடுதல் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள : ஸ்டீபன் டயோனிஸ் அப்பு (016-611 0681)

➢ **நானும் என்னுடைய அதிசவும்** ( அதிச வுக்கு முதலில் முக்கியத்துவம் தருதல். பணிக்குழுவிற்குப் பின்னர்)
- என்னுடய அதிச வில் நானும் ஓர் அங்கமாக இருக்கிறேனா? என்னுடைய பயணம்?
- அதிச மாதாந்திர சிந்தனைத் தாள் ஒன்றுகூடலைப் பற்றித் தெரியுமா? அதில் நான் கலந்துகொள்கின்றேனா?
- செபம் ஒன்றுகூடலைத் தவிர வேறென்ன வெளிப்புற நடவடிக்கைகளில் நான் பங்கெடுக்கிறேன்? தர்மகாரிங்கள் மற்றும் பல. எவ்வாறு
- அதிச வில் உள்ள இல்லங்களைச் சந்திக்கின்றேனா?
- அதிச /வட்டார பொறுப்பாளர்கள் அதிச ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களின் முழுமையாகப் பங்கெடுக்கின்றனரா?

- **<u>170 ஆம் ஆண்டு நிறைவு - கார்னர் ஸ்டோன் "காஃபி டேபிள் "</u>**புத்தகம் ஒன்றின் விலை ரிம:40.00 திருப்பலிக்குப் பின் அல்லது பங்கு அலுவலகத்தில் வாங்கிக்கொள்ளலாம்.
- **<u>பேராயர் ஜூலியன் லியாவ்</u>** <u>நம் அனைவரையும் செபிக்க அழைக்கிறார்:</u> மேய்ப்புப்பணி கடிதம் அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. 26-10-2018 (வெள்ளி) மாலை 6.00 மணிக்கு திருப்புகழ் மாலையுடன் மற்றும் திருப்பலி. தொடர்ந்து நற்கருணை ஆராதனை இரவு 10.00 மணி வரை இடம்: புனித யோவான் பேராலயம், கோலாலம்பூர். அனைவரும் வருக!
- **மறைக்கல்வி வகுப்பின் பாலர் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு பயிற்சிப் பட்டறை: "இன்னும் பயனளிக்கக்கூடிய வகையில் அணுகுதல்"**

  **நாள்: 20-10-2018(சனி) காலை 9.00 -1.00 (பகல்) API,** கோலாலம்பூர்
  உரையாளர்: டாக்டர் ஸ்டீவன் செல்வராஜு : தொடர்பு: ஜேக்கி 012- 4823 221
  (இறுதி நாள்:15-10-2018) நிதியாக குறைந்தது ரிம:10.00
- **"TRUINE GOD" உரை: வழங்குபவர்: அருள்திரு டாக்டர் கிளரென்ஸ் தேவதாஸ்**

  **நாள்: 25-10-2018(வியாழன்) மாலை 7.00 - 9.00 வரை API,** கோலாலம்பூர்
- **கலாச்சாரம் மற்றும் நாட்டின் வளர்ச்சி** - கண்காட்சி - இடம்: கத்தோலிக்க ஆராய்ச்சி மையம் மற்றும் யுகேஎம் பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் கண்காட்சி -

  நாள்: 24-10-2018 (சனி) காலை 9.30 -4.00(மாலை) இடம்: டேவான் பெர்டானா, யுகேஎம், பாங்கி. நுழைவு இலவசம். தொடர்பு: 03- 20266472 அல்லது மின்னஞ்சல்: events@crc.org.my
- **பங்கு மேய்ப்புப்பணி பேரவை 21-10-2018 (ஞாயிறு) பகல் 2.00 மணி**

  இடம்: மினவுதல் தேவாலய மண்டபம்.
  அனைவரும் வருக! அதிச உறுப்பினர்கள், பணிக்குழுக்கள், அப்போஸ்தல குழுக்கள், மேய்ப்புப்பணி மற்றும் நிதிக்குழு உறுப்பினர்கள் தவறாமல் கலந்துகொள்ள அழைக்கிறோம். உங்களுடைய ஆதரவும் செபங்களும் மிகவும் அவசியம்.